1979 ஏப்ரல் 21]

5. அறிக்கை அளித்தல்

உரிமைக் குழுவின் அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து உரிமைக் குழுவின் அறிக்கைகளை, பேரவைத் துணைத் தலைவர் அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

(1) 28-3-1978-ஆம் தேதியன்று வெளிநடப்புச் செய்யும் பொழுது 'பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பினை' எதிர்த்து பேரவையில் குரலெழுப்பிய திரு. துரை முருகன் அவர்கள் மீதான அவையுரிமை வழக்கு.

(2) திரு. துரைமுருகன் அவர்கள் 30-3-1978 ஆம் நாளன்று சில பெயர்கள் பொறிக்கப்பெற்ற இரண்டு அலுமினியத் தட்டுக்களைப் பேரவையில் காண்பித்தது தொடர்பான உரிமை மீறல் வழக்கு ஆகியவை குறித்த பேரவையின் அவை உரிமைக்குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(6) ஒழுங்குப் பிரச்சினை :

மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட விளக்கக் குறிப்புகள் முன் கூட்டியே வழங்கப்படாமை குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: பாய்ண்ட் ஆப் ஆர்டர். தொழில் சம்பந்தமான மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட புத்தகங்கள்—மற்றதெல்லாம் 2 நாளைக்கு, 3 நாளைக்கு முன்னதாக கொடுக்கப்பெறும். படிக்கலாம் என்று காத்திருந்தேன். நேற்று இரவு 10 மணி வரைக்கும் வரவில்லை. இரவு 11 மணிக்கு என்னுடைய அறையிலே இந்த மானியக் கோரிக்கைகள் சம்பந்தமான விளக்கக் குறிப்புகள் வந்தன. அதுவும் பெரிய புத்தங்கள். முதல் நாளே தந்திருக்க வேண்டும். அல்லது. நேற்று வந்திருக்கிறது என்று சொன்னாலும், மாலை 5 மணிக்கு முன்னாலே கொடுத்திருக்கலாம். தலைவர் அவர்கள் இதற்கு முன்னாலே சொல்லி இருக்கிறார்கள். ஒரு நாளைக்கு முன்னாலே கொடுக்கப்படும் என்று, ஆனால், இதில் அப்படிக் கொடுக்கவில்லை. ஆகவே, எப்படி படித்து, விவாதிப்பது என்பதைத் தலைவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஒரு புத்தகம் மட்டும் 323 பக்கங்கள் அடங்கிய பெரிய புத்தகம். இதில் பல வரலாறுகள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் ஒரு தடவையாவது படிக்க வேண்டும் என்றால், எவ்வளவு நேரம் வேண்டுமென்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாளைக்கு முன்னாலே கொடுத்தாலும், 323 பக்கங்களைப் படிக்க முடியாது,

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்பொழுது விவாதத்திற்கு வந்திருக்கும் பொழுது, அவற்றைப் படிக்காமலே, இங்கே விவாதித்தால், உண்மையிலேயே அது எந்த நிலையிலே இருக்கும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே, இனிமேலாவது, இம்மாதிரி நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்வதுதான், தாங்கள் எங்களுக்கு அளிக்கின்ற பாதுகாப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிச்சயமாக, இது குறித்து விசாரித்து, எதிர்காலத்தில் இவ்வாறு இல்லாமலிருக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

## (7) வரவு-செலவுத் திட்டம், 1979-80 மானியக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### (அ) கோரிக்கை எண்—24: தொழில்கள்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகின்றேன்:—

"மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10, 72, 53, 000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. எஸ். சதாசிவம்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் அரவக் குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குள், வெங்கை கற்கள் ஏராளமாக எடுக்கப்பட்டு, வெளி மாகாணங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்புவதைத் தடுத்து அப்பகுதியிலே ஒரு தொழிற்சாலை அமைப்பதைக் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண்—24 —தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10, 72, 53, 000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. என். பழனிவேல்; தலைவர் அவர்களே, பழனி வட்டம் நரிக்கல்பட்டிப் பகுதியில் நிரந்தரத் தொழிற்சாலை எதுவுமில்லாததால் அப்பகுதியில் அரசுத் துறை மூலம் நிரந்தர தொழில் மையம் ஏற்படுத்தித் தர வேண்டியது குறித்து விவாதிக்க —